2015 பிப்ரவரி 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**43—**

**தரம் உயர்த்துதல்**

***48891—திரு. க. பீம்ராவ்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரவாயல் தொகுதி, வளசரவாக்கத்திலுள்ள ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைகளைச் சாதனைகளாக்கி, சாதனைகளைச் சரித்திரமாக்கி, மக்களின் இதயத்திலே இடம் பிடித்து, 2016 ஆம் ஆண்டில் பெறப்போகும் வெற்றிக்கு வித்தாக, அடித்தளமாக, திருவரங்கம் வெற்றிமுலம் தொடர் வெற்றிகளைக் கண்டுவரும், மாண்புமிகு மக்களின் முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) எனது பதிலுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், வளசரவாக்கத்தில் இயங்கிவரும் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியினை, அப்பள்ளி அமைந்திருக்கும் பகுதியில் படிக்கும் மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப, நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் நல்லரசு, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 பிப்ரவரி 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.*

**திரு. க. பீம்ராவ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளி மிகவும் பழமையான பள்ளியாகும். 28-7-1934 ஆம் தேதி துவக்கப்பட்ட அந்தப் பள்ளி ஆரம்பப் பள்ளியாக இருந்தது. பிறகு 11-6-1994-ல் நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. தற்போது 156 பேர் அங்கு படிக்கின்றார்கள். குறிப்பாக, பெண் குழந்தைகள் வெகுதூரம் சென்று படிக்க வேண்டியுள்ளது. எனவே, வளசரவாக்கத்தில் உள்ள அந்த நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்தினால் பெண் குழந்தைகள் கூடுதலாகப் படிப்பதற்கு வாய்ப்பு இருக்கும். எனவே, அங்கே இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்கள் பயனடைய அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், வளசரவாக்கத்தில் இயங்கிவரும் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியானது, 28-7-1934 ஆம் தேதி ஆரம்பப் பள்ளியாகத் துவக்கப்பட்டு, 11-6-1994-ல் நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. தற்போது 84 மாணவர்கள், 72 மாணவிகள், மொத்தம் 156 மாணவ, மாணவியருடன் 3 இடைநிலை ஆசிரியர்கள், 3 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் ஒரு தலைமையாசிரியர் ஆகியோருடன் இப்பள்ளி இயங்கி வருகிறது. வளசரவாக்கம் பகுதியில் 5,136 பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் ஆதி திராவிட இனத்தைச் சார்ந்தவர் சுமார் 3,042 பேர் ஆவர். வளசரவாக்கத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் இராமாபுரம் பகுதியில் அரசு உயர்நிலைப் பள்ளியும், சுமார் 2 கி.மீ. தொலைவில் ஆலம்பாக்கம் பகுதியில் அரசு உயர்நிலைப் பள்ளியும் இயங்கி வருகின்றன. இருப்பினும் ஆதி திராவிட*

2015 பிப்ரவரி 20]

மக்களின் பாதுகாவலராகத் திகழும் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலுடன் நடைபெறும் நல்லரசு, கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான இடவசதி, தேவையான மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் நிதியாதாரம் இவற்றைக் கருத்திற்கொண்டு திருவள்ளூர் மாவட்டம் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம் வனசரவாக்கத்தில் இயங்கி வரும் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

**திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநேகமாக இந்தியாவிலேயே அதிகமாக சென்னை நகரை நோக்கி வரக்கூடிய மக்கள் திருவள்ளூர் மாவட்டத்தில்தான் அதிகம். அதாவது, 48.5 சதவீதம். எனவே, இப்போது இருக்கக்கூடிய மக்கள்தொகை என்பது பழைய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு. அங்கே கூடுதலாக மக்கள் வருகிறார்கள். எனவே, அந்தப் பள்ளியை அரசு தரமுயர்த்துவதாகச் சொல்லியிருக்கிறது. அதை இந்த ஆண்டே தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட அங்கே இருக்கக்கூடிய பிள்ளைகள் விளையாடக்கூடிய play ground-லே கார்ப்பரேஷன் லாரியை நிறுத்துகிறார்கள். லாரிக்கு மேலே ஏறி பிள்ளைகள் விளையாட முடியாது. எனவே, அந்த லாரிகளை அப்புறப்படுத்தி அதை play ground-ஆக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சு. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற இந்த நல்லரசானது வரும் நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப இவ்வாண்டு தரமுயர்த்த எடுத்துக்கொள்வதற்கு ஆராயும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.